## தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைப் புனரமைக்க ஒன்றிய அரசு நிதியுதவி வழங்கியுள்ளதா?

## தென்சென்னை தொகுதி எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேள்வி

புது தில்லி, பிப். 2

தென் சென்னையில் அமைந்துள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைப் புனரமைக்க ஒன்றிய அரசு நிதி உதவி வழங்கி உள்ளதா? அப்படி வழங்கி இருந்தால் அதுபற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன் கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து மக்களவையில் வியாழக்கிழமை அவர் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு.

தமிழகத்தில் உள்ள பல்வேறு நதிகள் மற்றும் நீர் நிலைகளைப் புனரமைக்க கடந்த ஐந்தாண்டுகளில் ஒன்றிய அரசு ஏதேனும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா? அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்திருந்தால் அதைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

தென்சென்னை மக்களவைத் தொகுதியில் அமைந்துள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலம் மற்றும் ஏரி குளங்களைப் புனரமைக்க ஒன்றிய அரசு நிதி உதவி வழங்கியுள்ள விவரத்தைத் தெரிவிக்க வேண்டும். இத்திட்டத்தில் ஒன்றிய அரசு மேற்கொண்ட முடிவுகளையும் இதர விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

அரசு மற்றும் தனியார் திட்டங்களுக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலம் மற்றும் இப்பகுதியில் உள்ள இதரநீர்

நிலைகளைப் பாதுகாக்க மேற்கொண்டுள்ள உத்தேச திட்டங்கள் அல்லது மேற்கொள்ளப்படப்போகும் செயல் திட்டங்கள் பற்றிய விவரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

**உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய நீர்வளத் துறை இணை அமைச்சர் விஸ்வேஷ்வர் டுட்டு அளித்த பதில் விவரம் வருமாறு**

நதிகளைத் தூய்மைப்படுத்தி புனரமைக்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் இதர கழிவு நீரை நதிகள் மற்றும் கடல் உள்ளிட்ட நீர் நிலைகளில் விடுவதற்கு முன்பாக சுத்திகரிப்பு செய்யப்பட்டு விடப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டியது மாநில அரசுகள் யூனியன் பிரதேச அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும். நீர் நிலைகள் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் இப்பணிகள் உதவிகரமாக இருக்கும்.

அதிக அளவு மாசுபடும் நீர்நிலைகளைக் கண்டறிந்து கழிவுநீர் கலப்பதைத் தடுக்க மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் மேற்கொண்டுவரும் பணிகளுக்கான நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டம் (என்ஆர்சிபி) வழங்கி வருகிறது. கங்கை நதி மற்றும் அதன் உபநதிகளைத் தவிர நமது நாட்டில் உள்ள அனைத்து நதிகளுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கழிவுநீர் மேலாண்மைத் திட்டம், கழிவுநீர் சுத்திகரிப்புத் நிலையங்கள்( எஸ்.டி.பி.) அமைத்தல், கழிவு நீரைத் தடுத்து வேறு வழியில் திருப்புதல் உள்ளிட்ட தூய்மைக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் இதில் அடங்கும்.

நகரப் பகுதிகளில் மாசுபடுத்தப்படும் நதி தீரங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் உத்தேசத் திட்டம் குறித்து மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து வரும் கோரிக்கைகளை தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பரிசீலித்து நிதி ஆதாரத்தைப் பொருத்து வழிகாட்டி நெறிகளின்படி முன்னுரிமை அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் பவானி, சென்னை, ஈரோடு, கரூர், குமாரபாளையம், கும்பகோணம், மதுரை, மயிலாடுதுறை, பள்ளிபாளையம், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சி ஆகிய 13 நகரங்களில் இடம் பெற்றுள்ள காவிரி, அடையாறு, கூவம், வைகை, வெண்ணாறு, தாமிரபரணி ஆகிய ஆறு நதிகளைப் புனரமைக்க தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.908.13 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 477.66 மில்லியன் லிட்டர் தண்ணீர் நாள் ஒன்றுக்கு சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு அரசுக்கு எவ்வித நிதியையும் ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்யவில்லை.

நமது நாட்டில் உள்ள சதுப்பு நிலங்கள் மற்றும் ஏரிகள் உள்ளிட்ட நீர்நிலைகளைப் பாதுகாக்கவும் மேலாண்மை செய்யவும் தேசிய அளவிலான நீர் வாழ் சுற்றுச்சூழல் பாதுகாப்பு (என்பிசிஏ) திட்டத்தை மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் நிதி பங்களிப்புடன் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாறுபாடு அமைச்சகம் ( எம்ஓஇஎப்) செயல்படுத்தி வருகிறது.

ஏரிகளைப் புனரமைத்து அவற்றில் உள்ள களைகளை எல்லாம் அகற்றி நீர் ஆதாரத்தைப் பாதுகாப்பது, கழிவு நீர் கலக்காமல் தடுப்பது, நீர் பிடிப்புப் பகுதிகளைப் பலப்படுத்துவது ஏரிகளை அழகுபடுத்துவது எல்லையை ஆய்வு செய்து வரையறுப்பது உயிரி வேலிகள் அமைப்பது மீன்வள மேம்பாடு நீர்நிலைகளை ஆக்கிரமித்துள்ள களைகளை அகற்றுவது பல்லுயிர் பாதுகாப்பு நீர்நிலைகளின் முக்கியத்துவம் பற்றிய அறிவைப் போதிப்பது

விழிப்புணர்வு ஏற்படுத்துவது சமுதாயப் பங்களிப்பை வலுப்படுத்துவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வது தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டத்தில் அடங்கும்

கடந்த 2017-18 முதல் 2021-22 வரை தமிழகத்தில் பள்ளிக்கரணை உள்ளிட்ட சதுப்பு நிலங்களைப் பாதுகாக்க ஒன்றிய அரசு ரூ.363.10 லட்சம் நிதியை விடுவித்துள்ளது

1.**கழுவேலி காலிவெளி**:

2017-18 ஆம் ஆண்டில் ரூ.36.56 கோடியும் 2018-19 ஆம் ஆண்டில் 24.94 கோடியும் 2019-20 ஆம் ஆண்டில் ரூ. 38.31 கோடியும் ஆக மொத்தம் ரூ. 99.81 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. **கோடியக்கரை**:

2017-18 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.25.5 கோடி. 2018-19 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 49.90 கோடி. 2019-20 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 44.77 கோடி. ஆக மொத்தம் ரூ. 119.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. **பள்ளிக்கரணை**:

2017-18 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 44.19 கோடி. 2018-19 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 45.25 கோடி. 2019-20ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 54.13 கோடி. ஆக மொத்தம் 143.57 கோடி செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைத்து திட்டங்களுக்கும் 2017-18 இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ. 105.80 கோடி

2018 -19 இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.120.09 கோடி.

2019-20 இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.137.21 கோடி.

ஆக மொத்தம் மேற்குறிப்பிட்ட அனைத்துத் திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 363.10 கோடி.

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாறுபாடு அமைச்சகம் சதுப்பு நிலப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைச் சட்டம் 2017 தொடர்பான விதிமுறைகளை வெளியிட்டது. இச்சட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு அளவில் தேசிய சதுப்பு நிலப் பாதுகாப்புக் கமிட்டி (என்.டபுள்யு.சி.) அமைக்கப்பட்டது.

சதுப்பு நிலங்கள் பாதுகாப்பு, புனரமைப்பு மற்றும் மேலாண்மை தொடர்பான பணிகளை ஒன்றிய அரசு மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அதிகாரிகள் மேற்பார்வையிட இந்த கமிட்டி வழிவகை செய்கிறது.

சதுப்பு நிலங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றி அவற்றை உரிய முறையில் பாதுகாப்பது, சதுப்பு நிலங்களில் திடக்கழிவுகளைக் கொட்டுவதைத் தடுப்பது உள்ளிட்ட அறிவிப்புகளை தேசிய சதுப்புநிலப் பாதுகாப்பு கமிட்டி அறிவித்தது.

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை (ராம்சர்- பறவைகள் சரணாலயம்) பாதுகாக்கப்பட்ட இடமாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. அதாவது சர்வதேச முக்கியத்துவம் இடங்களில் ஒன்றாக பள்ளிக்கரணை சதுப்பு நிலம் குறிப்பிடப்பட்டு அதனைப் பாதுகாப்பது, புனரமைப்பது மற்றும் மேலாண்மை செய்வதாகும்.

******